| பொய் | பொய் | — | 5 |

71. சீரான கம்பியாலாக்கப்பட்ட ஓர் அரைவட்ட வில் அதன் நடுப்புள்ளியிற் சமப்படுத்தப்படலாம். **ஏனெனில்** சீரான கம்பியாலாக்கப்பட்ட ஓர் அரைவட்ட வில் அதன் நடுப்புள்ளியில் தனது ஈர்ப்பு மையத்தைக் கொண்டிருக்கும்.

72. பொருளொன்றின் ஓர் உண்மை விம்பம் ஒரு குவிவுவில்லையினால் ஆக்கப்படும் போது, வில்லையை மாத்திரம் நகர்த்துவதனால், அதே நிலையில் இன்னொரு விம்பத்தைப்பெறலாம். **ஏனெனில்** ஒரு பொருளினதும், குவிவுவில்லையொன்று ஆக்கும் அதன் உண்மை விம்பத்தினதும் நிலைகள் ஒன்றுடனொன்று உடன் புணரிகளாகும் (இணைபவை)

73. முதன்மை மின்வழங்கியுடன் இரண்டு சர்வசமனான மின்குமிழ்கள் சமாந்தரமாக தொடுக்கப்பட்டபோது நுகரப்படும் வலுவானது ஒரு குமிழ் மாத்திரமே அவ்வாறு தொடுக்கப்படும்போது நுகரப்படும் வலுவின் அரைப் பங்காகும். **ஏனெனில்** சமாந்தரமாகத் தொடுக்கப்பட்டிருக்கும் சர்வசமனான இரண்டு தடைகளின் சமவலுத் தடையானது இரண்டின் ஒன்றினுடைய தடையின் அரைப்பங்காகும்.

74. முகவையிலிருக்கும் 30°C இலுள்ள ஓரளவு நீருக்கு பனிக்கட்டியைச் சேர்ப்பதிலும் பார்க்க, ஓரளவு பனிக்கட்டியை வெப்பப்படுத்துவதனால் 10°C வெப்பநிலையான நீர்த்தேக்கியை விரைவிலே பெறலாம். **ஏனெனில்** திட்டமான திணிவுடைய பதார்த்தமொன்றின் வெப்பநிலையை மாற்றுவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவு வெப்பநிலை வித்தியாசத்திற்கு நேர் விகிதசமமானது.

75. ஒருக்கேற்ற எஞ்சின்கள் இயங்காது நிறுத்தப்பட்ட நிலையில் சந்திரனை நோக்கிப் பயணஞ் செய்து கொண்டிருக்கும் வான வெளி வாகனமொன்றில் இருக்கும் பிரயாணி ஈர்ப்பில்லாத நிலைமையிலிருப்பார். **ஏனெனில்** சுயாதீனமாக விழும்போது ஈர்ப்பு விளைவுகள் ஒன்றையொன்று இல்லாமற் போகச் செய்யும்.

---

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 5 | 16. | 1 | 31. | 2 | 46. | 4 | 61. | 5 |
| 2. | 5 | 17. | 3 | 32. | 4 | 47. | 4 | 62. | 4 |
| 3. | 2 | 18. | 2 | 33. | 2 | 48. | 4 | 63. | 3 |
| 4. | 3 | 19. | 3 | 34. | 4 | 49. | 4 | 64. | 4 |
| 5. | 3 | 20. | 3 | 35. | 4 | 50. | 4 | 65. | 1 |
| 6. | 1 | 21. | 3 | 36. | 2 | 51. | - | 66. | 4 |
| 7. | 4 | 22. | 4 | 37. | 3 | 52. | 2 | 67. | 2 |
| 8. | 3 | 23. | 4 | 38. | 4 | 53. | 3 | 68. | 2 |
| 9. | 1 | 24. | 5 | 39. | 1 | 54. | - | 69. | 2 |
| 10. | 5 | 25. | 2 | 40. | 2 | 55. | 4 | 70. | 1 |
| 11. | 3 | 26. | 3 | 41. | 2 | 56. | 5 | 71. | 3 |
| 12. | 2 | 27. | 2 | 42. | 3 | 57. | 1 | 72. | 1 |
| 13. | 3 | 28. | 3 | 43. | 3 | 58. | 3 | 73. | 4 |
| 14. | 3 | 29. | 2 | 44. | 3 | 59. | 3 | 74. | 5 |
| 15. | 2 | 30. | 1 | 45. | 2 | 60. | 3 | 75. | 1 |

www.aswamphysics.weebly.com

Scanned with CamScanner

69.




EGDO Public Library Kalmunai

மேலேயுள்ள படத்தில், $\frac{I_1}{I_2}$ எனும் விகிதம்:

1. 1/2 ஆகும் 2. 2/3 ஆகும் 3. 1 ஆகும்

4. 3/2 ஆகும் 5. 2 ஆகும்

70. ஒரே மூன்று கொள்ளளவிகளின் பின்வரும் சேர்மானங்கள் ஒரே மின்முத்தத்திற்கு மின்னேற்றப்படும் போது அவற்றுள் எது அதிகுறைந்த அளவு சக்தியைச் சேமித்திருக்கும் ?

1.



2.



3.



4.



5.



71 இலிருந்து 75 வரையுள்ள வினாக்களில், ஒரு " கூற்றும் " அதன் பின் ஒரு "காரணமும்" கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் உண்மையானவையா என்பதைக் (கூற்றிற்கும் காரணத்திற்கும் உள்ள தொடர்பைப் பொருட்படுத்தாது) கவனிக்க. இரண்டும் உண்மையாயின், "காரணம்" கூற்றிற்குத் தகுந்த விளக்கம் தருகின்றதா என்பதைத் தீர்மானிக்க. பின்னர் விடையைப் பின்வருமாறு குறிக்க.

கூற்று, காரணம் ஆகிய இரண்டும் உண்மையாக இருந்து, கூற்றிற்கு காரணம் தகுந்த விளக்கம் தந்தால், விடைத்தாளிலே 1 இன்மேல் X என்று அடையாளமிடுக.

கூற்று, காரணம் ஆகிய இரண்டும் உண்மையாக இருந்து கூற்றிற்கு காரணம் தகுந்த விளக்கம் தராவிட்டால், விடைத்தாளிலே 2, இன்மேல் X என்று அடையாளமிடுக.

கூற்று உண்மையாகவும் காரணம் பொய்யாகவும் இருந்தால், விடைத்தாளிலே 3 இன்மேல் X என்று அடையாளமிடுக.

கூற்று பொய்யாகவும், காரணம் உண்மையாகவும் இருந்தால், விடைத்தாளிலே 4 இன்மேல் X என்று அடையாளமிடுக.

கூற்று, காரணம் ஆகிய இரண்டும் பொய்யாயின் விடைத்தாளிலே 5 இன்மேல் X என்று அடையாளமிடுக.

Scanned with CamScanner

மை பதிப்பகத்துக்குரியது.

# ஸ்ரீ லங்கா வெளியீடு

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## பௌதிகவியல் 11 'A' க.பொ.த. (உயர்தரம்) மாதிரி விடைகள், ஏப்பிரல், 1978

1. (A) ஊக்கின் விதியையும் அது எந்த நிபந்தனைகளின் கீழ் உண்மையாக இருக்குமென்பதையும் கூறுக.

மீள்சக்தி எல்லைக்கு உட்பட்ட இழையின் நீட்சியானது சுமைக்கு நேர்விகித சமனாக இருக்கும். மீள்சக்தி எல்லைக்குள் உண்மையாக இருக்கும்.

(B) கீழேயுள்ள படத்திற் காட்டிய ஆய்கருவியைப் பயன்படுத்தி இந்த விதியின் உண்மையை ஆராயுமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.




(a) x காட்டும் அமைப்பு யாது ?
வேணியர் அளவுச்சட்டம்.

(b) x யைப் பயன்படுத்துவதில் உள்ள நன்மை யாது ?
நீட்சியைத் திருத்தமாக அளப்பதற்காகும்.

(c) இப்பரிசோதனையில் எதற்காக இரண்டு கம்பிகள் பயன்படுத்துகிறோம் ?

(i) வெப்பநிலை மாற்றங்களால் ஏற்படும் வழுவைத் தடுத்தல்.

(ii) கம்பி தாங்கப்பட்ட தாங்கியின் [illegible] ஏற்படும் வழுவைத் தவிர்த்தல்.

(d) இப்பரிசோதனையில் என்ன அளவீடுகளை [illegible] ?

சாராமாறி B யில் இருந்து தொங்கவிடப்பட்ட சுமை W

சார்மாறி வேணியர் அளவீட்டிலிருந்து பெறப்பட்ட நீட்சி l

(e) நீர் பெற எதிர்பார்க்கும் வரையைப் பருமட்டாக வரைக. x அச்சில் சாராமாறியைக் குறித்து அச்சுக்களைப் பெயரிடுக.




(f) (e) யிலுள்ள வரையைப் பயன்படுத்தி, கம்பியில் சேமிக்கப்பட்டுள்ள விகாரச் சக்தியை எவ்வாறு பெறுவீர் ?

OP க்கும் y அச்சிற்கும் இடைப்பட்ட பரப்பைக் கணிப்பதன் மூலம் விகாரச்சக்தி பெறப்படும்.

(g) கம்பியில் பதார்த்தத்தின் யங்கின் குணகத்தைத் துணிவதற்கு மேலதிகமாக என்ன அளவீடுகள் தேவை ?

(i) கம்பியின் நீளம் L

(ii) கம்பியின் குறுக்கு வெட்டு முகப்பரப்பு a

(h) (e) யிலுள்ள வரையிலிருந்து (g) ற் கூறப்பட்ட மேலதிகமான அளவீடுகளிலிருந்தும் கம்பியின் பதார்த்தத்தினது யங்கின் குணகத்தை எவ்வாறு கணக்கிடுவீர் எனக் காட்டுக.

வரையின் சாய்வு விகிதம் $G = \dfrac{l}{W}$

யங்கின் குணகம் $Y = \dfrac{W g L}{a \times l} = \dfrac{g L}{a G}$

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

2.




மாறா அமுக்கத்தில் வளியின் விரிவுக் குணகத்தைத் துணிவதற்கு கீழேயுள்ள ஆய்கருவியானது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.

(a) இந்தப் பரிசோதனையில், குமிழ் B யின் உட்புறம் உலர்ந்ததாக இருப்பது அவசியமானது. காரணத்தை விளக்குக.

நீர் ஆவியாகி, வளி விரிவடைந்து வெளியேறும் வளியைவிடக் கூடியளவு வளியை வெளியேற்றும். அத்துடன் குளிரும்போது நீராவி கூடியளவு நீரை உறிஞ்சும்.

(b). கண்ணாடிக்குழாய் A யானது ஏன் குறுகியதாக இருக்கவேண்டுமென்பதற்கு ஒரு காரணம் தருக.

குமிழ் B யைவிட குறைந்த வெப்பநிலையில் இருப்பதால் A யில் வளியின் விரிவு B யில் உள்ள வளியுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருக்கும். எனவே A பெரிதானதாக இருந்தால் பெரிய வழு ஏற்படும்.

(c). B யானது மெல்லிய சுவருடைய குமிழா, தடித்த சுவருடைய குமிழா பயன்படுத்த வேண்டும் ? (உமது விடையை விளக்குக.)

B மெல்லிய சுவருடையது. B யில் உள்ள வளி மிக விரைவில் நீர்த்தொட்டியிலுள்ள நீரின் வெப்பநிலையைப் பெறுவதற்காகவும், வெப்பத்தை எளிதில் கடத்தக்கூடியதாகவும் இருக்கும்.

(d) நீர்த் தொட்டியும் கலக்கியும் ஏன் அவசியமானவை என்பதை விளக்குக.

நீர்த்தொட்டி குமிழை சீரான வெப்பநிலையில் வைத்திருப்பதற்கு அவசியம். கலக்கியானது நீர்த்தொட்டியில் உள்ள நீரை ஒரே வெப்பநிலையில் வைத்திருப்பதற்காகும்.

(e) இந்தப் பரிசோதனையைச் செய்யும்போது நீர் பதிவுசெய்யும் அளவீடுகளை அட்டவணைப்படுத்துக.

(i) நீரின் ஆரம்ப வெப்பநிலை - (ii) நீரின் இறுதி வெப்பநிலை
(iii) குமிழின் மொத்தக் கனவளவு
(iv) சூடான குமிழை நீரிலிடும்போது உறிஞ்சப்பட்ட நீரின் கனவளவு

(f) இப்பரிசோதனையில் குமிழ் B யின் விரிவை நீர் புறக்கணிக்கலாம். இது ஏன் ஏற்றுக்கொள்ளத்தக்கது என விளக்குக.

வளியின் விரிவுடன் ஒப்பிடும்போது குமிழ் B யின் விரிவைப் புறக்கணிக்கலாம்.

(g) குமிழினது உட்கன அளவு 300 மி.லீற்றர் ஆகவும், மாறா அமுக்கத்தில் வளியின் விரிவுக் குணகம் 0.0037/°C ஆகவும் இருப்பின், வெப்பநிலை 30 °C யில் இருந்து 80 °C இற்கு உயர்த்தப்படும்போது அதே அமுக்கத்தில் குமிழிலிருந்து வெளியேறும் வளியின் கன அளவைக் கணிக்க.

$$V_1 = V_0(1 + \alpha t_1) \;; \qquad V_2 = V_0(1 + \alpha t_2)$$

$$\therefore V_2 - V_1 = \frac{V_1 \alpha (t_2 - t_1)}{1 + \alpha t_1} = \frac{300 \times 0.0037 \times 50}{1 + 0.0037 \times 50} = 50 \text{ க.சமீ}$$

$$= 50 \text{ க.சமீ} \;///$$

3. f எனும் குவியத்தூரம் கொண்ட ஒரு குவிவுவில்லை L ஆனது M எனும் தளவாடியொன்றிற்கு முன்பாக அதன் அருகாமையில் வைக்கப்பட்டிருக்கிறது. வில்லைக்கு முன்பாக O எனும் பொருளொன்றின் நிலையானது O வின் விம்பம் அதனுடன் அருகாகப் பொருந்துமாறு செப்பஞ் செய்யப்படுகிறது.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner




(a) இந்த விம்பம்

(i) உண்மையானதா அல்லது மாயமானதா ?

உண்மையானது.

(ii) நிமிர்ந்ததா அல்லது தலைகீழானதா ?

தலைகீழானது.

(b) அதன் உருப்பெருக்கம் எவ்வளவு ?

உருப்பெருக்கம் = 1

(c) வில்லை L யிலிருந்து பொருளின் தூரமாகிய u வில்லையின் குவியத்தூரத்துடன் என்ன தொடர்புடையது ?

u = f குவியத்தூரம்

(d) இப்போது ஆடி கிடையாக இருக்க அதன்மீது வில்லை L வைக்கப்பட்டு, வில்லைக்கும் ஆடிக்கும் இடையில் சிறிது (தெரிந்த முறிவுக்குணகம் $\mu$ வைக் கொண்டது) நீர் இடப்படுகின்றதெனக் கொள்க. வில்லையில் இருந்து பொருளின் தூரம் $u_1$ ஆக இருக்கும்போது விம்பமும், பொருளும் மீண்டும் பொருந்துகின்றன.




$u_1$ ஐ f யுடன் தொடர்புபடுத்தும் சமன்பாடு எழுதுக.

$$-\frac{1}{-u_1} = -\frac{1}{f} + \frac{1}{f^1}$$

$f^1$ = நீர் வில்லையின் குவியத்தூரம்

$$\frac{1}{f^1} = (\mu - 1)\left(\frac{1}{r_1}\right)$$

(e) வில்லையானது இப்போது கவிழ்த்து வைக்கப்படுகின்றதெனவும் பொருளின் தூரம் $u_2$ ஆக இருக்கும் போது விம்பமும் பொருளும் மீண்டும்/பொருந்துகின்றதெனவும் கொள்க.

கண்ணாடி வில்லை L, இனது வளைவினாரைகள் $r_1$, $r_2$ என்பவற்றைக் காண [illegible], நீர் பயன்படுத்தும் சமன்பாடுகளைத் தருக.

$$\frac{1}{r_1} = \frac{1}{(\mu - 1)}\left(\frac{1}{f} - \frac{1}{u_1}\right)$$

$$\frac{1}{r_2} = \frac{1}{(\mu - 1)}\left(\frac{1}{f} - \frac{1}{u_2}\right)$$

(f) வில்லையின் பதார்த்தத்தின் முறிவுக்குணகத்தைக் கணிப்பதற்கு நீர் பயன்படுத்தும் சூத்திரத்தை எழுதுக.

$$\frac{1}{f} = (\mu_g - 1)\left(\frac{1}{r_1} + \frac{1}{r_2}\right)$$

(g) பொருந்துகையானது வில்லை தனியாக இருக்கும்போது 15 சமீ யிலும், நீர் இடப்படும்போது 23 சமீ யிலும், 27 சமீ யிலும் பெறப்படுகின்றதாயின், வில்லையின் கண்ணாடியின் முறிவுக் குணகத்தைக் கணிக்க. நீரின் முறிவுக்குணகம் = 1.33

$$\frac{1}{r_1} = \frac{1}{0.33}\left(\frac{1}{15} - \frac{1}{23}\right)$$

$$\frac{1}{r_2} = \frac{1}{0.33}\left(\frac{1}{15} - \frac{1}{27}\right)$$

$$\frac{1}{15} = (\mu_g - 1)\left(\frac{2}{15} - \frac{1}{23} - \frac{1}{27}\right)\frac{1}{0.33}$$

$$\mu_g = 1.42$$

[illegible]கர்த்துக்கூடிய உலோகக் கவ்விகள் இரண்டு, வட்டமான கம்பித் தடமொன்றுடன் இணைக்கப்பட்டுள்ளன. தடத்தின் நீளம் 1 மீற். ஆகும். கம்பியின் கு.வெ.மு. ஆரை 0.2 மி. மீற்றர் ஆகும். கம்பிகளுக்கிடையிலான தூரம் 1 ஆனது மாற்றப்படக்கூடியது. இரண்டு உலோகக் கம்பிகளும் ஒரு உவிற்ஸ்ரன் பால அமைப்பின் நான்காம் புயத்தின் [illegible] தொடுக்கப்பட்டிருக்கின்றன.

Scanned with CamScanner




(a) பாலத்தைப் பயன்படுத்தித் தடையை அளக்கும்போது பின்வரும் செய்முறைகளுள் ஒன்றைக் கையாண்டு பின் சுற்று பூரணமாக்கப்படும். சரியான செய்முறையின் கீழ்க் கோடிடுக.

(i) A யை முதலிலும் பின்னர் B யையும் அழுத்தல்.

(ii) <u>B யை முதலிலும் பின்னர் A யையும் அழுத்தல்.</u>

(iii) A யையும், B யையும் ஒரே நேரத்தில் அழுத்தல்.

(b) (a) யிற் குறிப்பிடப்பட்ட செயன்முறையைக் கையாளுவதற்குரிய காரணம் யாது?
தூண்டல் பின்னோட்டத்தினால் வரும் விளைவுகளைத் தடுப்பதற்காக ஆகும்.

(c) $l$ இன் குறித்த பெறுமானத்திற்குக் கல்வனோமானியில் பூச்சியத்திரும்பல் பெறப்படும்போது x, y, z என்பவற்றின் பருமன்கள் முறையே 40 Ω, 2000 Ω, 50 Ω ஆகும். இரண்டு கவ்விகளுக்குமிடையேயுள்ள தடை R எவ்வளவு?

$$\frac{40}{R} = \frac{2000}{50} \qquad R = 1\ \Omega$$

(d) $l$ இன் பெறுமானத்திற்கும் R எதிர் $l$ வரைபைப் பருமட்டாக வரைக.




(e) $l$ = 50 cm ஆக இருக்கும்போது R = 1 Ω ஆயின், கம்பியின் பதார்த்தத்தின் தற்தடையைக் கணிக்க.
(விடையைச் சுருக்க வேண்டியதில்லை)

1 cm கம்பியின் தடையை r என்க.

$$\frac{1}{R} = \frac{1}{r.l} + \frac{1}{r(100-l)} \qquad \frac{1}{50r} + \frac{1}{50r}$$

∴ $r = 1/25$ ∴ 50 cm யின் தடை $= \frac{1}{25} \times 50 = 2\ \Omega$

தற்தடையை S என்க. $S = \frac{2 \times \pi \times (0.2)^2}{50} = \frac{\pi \times (0.2)^2}{25}$

$S = 5.02 \times 10^{-5}$ Ω cm.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

ஸ்ரீ லங்கா வெளியீடு

ஸ்ரீ லங்கா புத்தகசாலை

234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பௌதிகம் 1 3' க.பொ.த. (உயர்தரம்) மாதிரி விடைகள், ஏப்ரல், 1978.

1. ஆக்கிமிடீசின் தத்துவத்தைத் தருக.

ஒரு திரவத்தினுள்ளேயே இருக்கும் அதன் திரவப் பகுதியொன்றின் சமநிலையைக் கருத்திற் கொண்டோ அல்லது வேறு முறையிலோ மேற்கூறிய தத்துவத்தைப் பெறுக.

3 மீற்றர் உயரமும் 2 மீற்றர் விட்டமும் கொண்டதும், $5 \times 10^3$ கிலோகிராம் திணிவுடையதுமான உருளைவடிவ அம்மணியொன்று அதன்கீழ் முனை 22 மீற்றர் ஆழத்தை அடையுமாறு நன்னீர் ஏரியொன்றினுள்ளே இறக்கப்படுகின்றது. நீர்ப் பாரமானியின் உயரம் 10 மீற்றர் ஆயின், பின்வருவனவற்றைக் கணிக்க:

(i) மணியினுள்ளே நீர்மட்டத்தின் உயரம்.

(ii) மணியைத் தாங்கியிருக்கும் சங்கிலியின் திணிவானது மணியின் திணிவோடு ஒப்புநோக்கின் புறக்கணிக்கத்தக்கதென எடுத்து, சங்கிலியிலுள்ள இழுவை.

விடை : 1

ஆக்கிமிடீசின் தத்துவம் : ஓய்வில் இருக்கும் ஒரு பாய்பொருளினுள் ஒரு பொருளை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ அமிழ்த்தும்போது அப்பொருளில் ஏற்படும் மேலுதைப்பு அதனு அப்பொருளினால் இடம்பெயர்க்கப்பட்ட பாய்பொருளின் நிறைக்குச் சமனாகும்.




d = திரவத்தின் அடர்த்தி

பொருளின் அடியில் மேல்நோக்கி அமுக்கம் $= (\pi + h_2dg)a$

பொருளின்மேல் கீழ்நோக்கிய அமுக்கம் $= (\pi + h_1dg)a$

∴ மேல்நோக்கிய மீதி விசை $= dg(h_2 - h_1)a$

$= dgv$

= இடம்பெயர்க்கப்பட்ட திரவத்தின் நிறை.




(i) மணியினுள்ளே நீரின் மட்ட உயரம் h மீற் என்க.

போயிலின் விதிப்படி

$$(22 + 10 - h)(3 - h) = 10 \times 3$$

$$h = 2 \text{ மீற்றர்}$$

(ii) சங்கிலியில் உள்ள இழுவை T கி. கிராம் நிறை என்க.

மணியில் தாக்கும் மேலுதைப்பு = u கி. கிராம் என்க.

∴ ஆக்கிமிடீசின் தத்துவப்படி, $u = \pi \times 1^2 \times 1 \times 10^3$ கி. கிராம்

∴ மணியின் சமநிலைக்கு $T + u = 5 \times 10^3$

$$\therefore T = 5 \times 10^3 - \pi \times 10^3$$

$$= 10^3(5 - 3.14) = 1.86 \times 10^3 \text{ கி. கிராம் நிறை}$$

வாயுக்களின் எளிய இயக்கப்பாட்டுக் கொள்கையின்து எடுகோள்களைக் கூறுக. இவ் எடுகோள்களின் அடிப்படையில், இலட்சிய வாயுவொன்றின் அமுக்கத்திற்கும் அதன் மூலக்கூறுகளின் வர்க்க இடைமூல வேகத்திற்கும் இடையேயுரான ஒரு தொடர்பைப் பெறுக. வாயுவின் மூலக்கூறொன்றினது வர்க்க இடைமூல வேகத்திற்கும் அதன் வெப்பநிலைக்கும் இடையேயான தொடர்பையும் தருக.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

... 27°C இல் புரோபேன் மூலக்கூறுகளினது வர்க்க இடைமூல வேகத்தைக் கணிக்க.

விடை : 2

இயக்கப்பாட்டுக் கொள்கையின் எடுகோள்கள் :

(i) மூலக்கூறுகளின் கனஅளவு பாத்திரத்தின் கனஅளவுடன் ஒப்பிடும்போது புறக்கணிக்கத்தக்க

(ii) மூலக்கூறுகள் பூரண மீள்தன்மையுடையவை.

(iii) மூலக்கூறுக்களுக்கிடையேயுள்ள கவர்ச்சிவிசை புறக்கணிக்கத்தக்கது.

(iv) மூலக்கூறுகளிடையில் மோதுகை நேரமானது, மோதுகைகளுக்கு இடைப்பட்ட நேரத்துடன் ஒப்பிடப்படும்போது தவிர்க்கக்கூடியது.




ஒரு கோளப்பாத்திரத்தினுள் உள்ள ஒரு மூலக்கூறினது இயக்கம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே, இம்மூலக்கூறு ஆரை OA உடன் θ கோணத்தை ஆக்கும் வண்ணம் A இல் மோதுமாயின், அது OA உடன் சம்கோணம் θ ஆக்கும் பாதையில் மீளும். மேலும் இது மோதுகையின்போது இயக்கசக்தியை இழக்காது என்பதால், அதன் கதி C ஆனது மாற்றமடையாது. இது வேறு மூலக்கூறுகளுடன் மோதவில்லையெனக் கொண்டால், ஒவ்வொரு மோதுகையின்போதும் சுவருக்குச் செங்குத்தாக மூலக்கூறின் உந்தம் mc Cos θ ஆனது எதிர்மாற்றப்படுகிறது. (Reversed) சுவருக்குச் சமாந்தரமாக மூலக்கூறின் உந்தமானது மாற்றமடையாது.

ஒரு மோதுகையின்போது உந்தமாற்றம் $= 2\,mc \cos\theta$

படத்தில், $AB = BD = 2r \cos\theta$

இரு மோதுகைகளுக்கிடைப்பட்ட நேரம் $= \dfrac{2r\cos\theta}{C}$

உந்தமாற்ற விதம் $= \dfrac{2mc\cos\theta}{2r\cos\theta/C} = \dfrac{mc^2}{r}$

சுவருடன் மோதுகையினால், ஏற்பட்ட சராசரி உந்தமாற்றவிதம் $= \dfrac{m\overline{c^2}}{r}$

இங்கு $\overline{c^2}$ ஆனது $c^2$ இனது சராசரிப் பெறுமானத்தைக் குறிக்கிறது. $\overline{c^2}$ என்பது வெவ்வேறு மூலக்கூறுகளின் கதிகளின் பெறுமானங்களின் வர்க்கங்களின் சராசரியாகும். N மூலக்கூறுகள் இப்பாத்திரத்திலிருப்பின், அவர்களில் ஏற்படும் உந்த மாற்ற வீதம் $= N\dfrac{m\overline{c^2}}{r}$

1 அலகு கன அளவில் n மூலக்கூறுகள் இருப்பின் வாயுவால் சுவர்களில் ஏற்பட்ட விசை $F = 4/3\, \pi r^3 n \dfrac{m\overline{c^2}}{r}$

அமுக்கம் $p = \dfrac{F}{4\pi r^2} = \dfrac{1}{4\pi r^2} \times \dfrac{4}{3}\pi r^2 nm\overline{c^2} = \dfrac{1}{3}nm\overline{c^2}$

வர்க்க இடைமூல வேகத்திற்கும் வெப்பநிலைக்கும் இடையேயான தொடர்பு $\sqrt{\overline{c^2}} = \sqrt{\dfrac{3RT}{M}}$

வாயுமாறிலி $R = 8.3 \times 10^7$ எக்கு மூல் $^{-1}$ $^{o}C^{-1}$

மூலக்கூற்று நிறை $M = 160$

$T = 27 + 273$

$$\sqrt{\overline{c^2}} = \sqrt{\frac{3 \times 8.3 \times 10^7 \times 300}{160}}$$

$= 2.16 \times 10^4$ சமீ / செக். ///

3. திருசியமானியொன்றைக் கொண்டு அளவீடுகளை எடுக்க ஆரம்பிக்கு முன்னர் அதன் பகுதிகளை எவ்வாறு செப்பஞ்செய்வீரென விபரிக்க.

நேர் வரிசையாக்கியின் பிளப்பிலிருந்து வரும் விரி ஒளிகற்றை இந்த ஆய்கருவியினூடு செல்லும் பாதையைக் காட்டுக.

அரியத் திருசியமானியொன்றைப் பயன்படுத்தி ஓர் அரியத்தினது பதார்த்தத்தின் முறிவுக்குணகத்தை எவ்வாறு துணியலாமென ஒளிக்கதிர்ப் படங்களின் துணையுடன் விளக்குக. கணிப்பதற்குத் தேவைப்படும் சூத்திரத்தை தருக.

விடை : 3 குறுக்குக் கம்பிகளைத் தெளிவாகவும் கண் விகாரப்படாதவாறு நோக்கத் தக்கதாகவும் பார்வைத்துண்டை முன்பின் அசைத்துச் சரிசெய்க. பின்பு பரிசோதனை முடியும்வரை இச்செப்பஞ்செய்தலைக் குழப்பலாகாது.

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

தொலைகாட்டியைச் செப்பஞ் செய்தல் : தொலைகாட்டியைத் திருப்பி தூரப் பொருளொன்றை நோக்கி அப்பொருளின் விம்பமும் குறுக்கு கம்பிகளும் இடமாற தோற்ற வழுவின்றி ஒன்றாகப் பொருந்தத்தக்கவாறு செய்வதற்கு திருகாணியின் ஒழுங்கைப் பிரயோகிக்குக. இவ்வாறு செய்த பின் தொலைகாட்டி சமாந்தரக் கதிர்களை ஏற்கத்தக்கவாறு செப்பஞ் செய்யப்பட்டதாக அமையும்.

(c) நேர்வரிசையாக்கியைச் செப்பஞ்செய்தல் : பிளவை சோடிய ஒளியால் ஒளிப்படுத்தி தொலைகாட்டியைத் திருப்பிப் பிளவை நோக்குக. அப்பொழுது ஒளி நேர்வரிசையாக்கியினூடு செல்கிறதாகும். பிளவின் விம்பமும் குறுக்குக் கம்பிகளும் இடமாற தோற்றவழுவின்றி ஒன்றாக இருக்கத்தக்கவாறு திருகாணியைச் சரிசெய்க. அப்பொழுது நேர்வரிசையாக்கியிலிருந்து வெளி வரும் கதிர்கள் சமாந்தரமாகச் செல்லும்.

(d) அரியத்தின் மேசையைச் செப்பஞ் செய்தல் : மேசையை மட்டமாக்கவேண்டும். அரியத்தின் மேசையில் இரு திருகாணிகள் இணைக்கும் கோட்டிற்குச் சமாந்தரமாக நீர்மட்டம் ஒன்றை வைக்கவும். இத்திருகாணிகளிலொன்றை நீர்மட்டத்தின் குமிழி அதன் மையத்திற்கு வரத்தக்கவாறு சரிசெய்க. பின்பு நீர்மட்டத்தை எடுத்து இக்கோட்டுக்குச் செங்குத்தாக வைக்க. இப்பொழுது குமிழியை நீர்மட்டத்தின் மையத்திற்கு கொண்டு வருமுகமாக மற்றைய திருகாணியை மட்டும் சரி செய்க.

கதிர்ப்படம்:




அரியப் பதார்த்தத்தின் முறிவுக்குணகத்தைத் துணிதல் :

(a) அரியக் கோணத்தைத் துணிதல் :




நேர்வரிசையாக்கியிலிருந்து வரும் சமாந்தரக் கதிர்கள் XY, XZ என்னும் முகங்களில் பட்டுத் தெறிப்படையும். இத்தெறிப்படையும் கதிர்களை தொலைகாட்டியை P, Q என்னும் நிலைகளில் வைத்து நோக்கலாம்.

அரியத்தின் மேசையோடு பொருத்தப்பட்டிருக்கும் வேணியர்கள் குறிக்கும் வாசிப்புக்கள் இரு நிலைகளிலும் எடுக்கப்படும். P, Q என்னும் இரு நிலைகளுக்கும் இடையேயுள்ள கோணம் அரியக் கோணத்தின் இருமடங்காகும். அகவே அதன் அரைமடங்கு அரியக் கோணத்தைத் தரும்.

(b) இழிவு விலகல் கோணத்தைத் துணிதல்




(c) சூத்திரத்தை நிறுவல்

$$r_1 + r_2 = A$$

$$i_1 + i_2 - (r_1 + r_2) = D$$

இழிவு விலகல் நிலையில்

$$i_1 = i_2 = i$$

$$r_1 = r_2 = r$$

$$2i - A = D$$

$$i = \frac{A + D}{2} \qquad r = A/2$$

இழிவு விலகல் கோணம்

$$D = \frac{D_1 + D_2}{2}$$

$$\frac{\sin i}{\sin r} = \frac{\sin \frac{(A+D)}{2}}{\sin A/2}$$

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

4. "பரிவு" என்பதன் கருத்தை விளக்குக. இரண்டு உதாரணங்கள் தருக.

கீழ்முனை நீரில் அமிழ்த்தியிருந்த நிலைக்குத்தான பரிவுக்குழாயொன்றின் மேலாக 512 ஹேற்சு மீடிறன் கொண்ட ஓர் இசைக்கவர் ஒலிக்கப்பட்டது. வளிநிரலின் நீளம் 15.1 சென்ரி மீற்றர் ஆகவும் இருந்தபோது பரிவு பெறப்பட்டது. அறைவெப்பநிலை $30^{\circ}C$ ஆக இருந்ததெனில் வளியில் ஒலியின் கதியையும் குழாயின் முனைத்திருத்தத்தையும் கணிக்க. $0^{\circ}C$ இல் வளியில் ஒலியின் கதியையும் கணிக்க.

விடை : 4




அதிரும் பொருளினதும் பிரயோகிக்கும் விசையினதும் தன் அதிர்வெண்கள் சர்வசமனாக இருப்பின், பிரயோகிக்கும் விசை பொருளை அதிரச் செய்யும் பொழுது பொருள் ஒரு பெரிய வீச்சத்துடன் உடனடியாக அதிரும். இத்தகைய அதிர்வு பரிவு எனப்படும்.

உதாரணம்

(i) சமநீளமுடைய இழைகளில் தொங்கவிடப்பட்ட ஒரு பருமனான குண்டுகள் அதிரல்.

(ii) ஒரே அதிர்வு எண்களையுடைய இரு இசைக்கவர்கள் அதிரல்.




முனைத்திருத்தம் = e சமீ எனக

$e + l_2 = \frac{3}{4}\lambda$

$e + 48.3 = \frac{3}{4}\lambda$

$V = 512 \times \frac{4}{3}(e + 48.3)$

$e + l_1 = \lambda/4$

$e + 15.1 = \lambda/4$ $\quad v = n\lambda$

$v = 512 \times 4(e + 15.1)$

$\therefore (e + 15.1) = \frac{(e + 48.3)}{3}$

$e = 5cm$

$\therefore$ 30 cm $\quad V_{30} = 512 \times 4(.5 + 15.1)$

$= 339.7$ cm/Sec

$\frac{V_0}{V_{30}} = \sqrt{\frac{273}{303}}$ $\quad V_0 = 322.52$ cm/sec

5. A, எனும் தட்டுப் பரப்பளவும் d எனும் இடைத்தூரமுங் கொண்ட சமாந்தரத் தட்டு வளி ஒடுக்கியொன்றின் கொள்ளளவத்திற்கான ஒரு கோவையைப் பெறுக.

மேற்கூறிய சமாந்தரத் தட்டு வளி ஒடுக்கியானது V எனும் மின்னழுத்தமுடைய ஒரு முதலுடன் தொடுக்கு மின்வேற்றப்படும்போது, தட்டுகளுக்கிடையே இருக்கும் கவர்ச்சி விசை யாது.

இப்போது, இந்தக் கொள்ளளவி K எனும் மின்கோடு புகுவிடக மாறிலியைக் கொண்ட திரவமொன்றில் அமிழ்த்தப்படுமாயின், புதிய கவர்ச்சி விசை எவ்வளவாக இருக்கும் மின்னேற்றப்பட்ட பின்னர் கொள்ளளவி தனிமையாக்கப்பட்டுப் பின் திரவத்தில் அமிழ்த்தப்பட்டிருந்தால் புதிய கவர்ச்சி விசை எவ்வளவாக இருந்திருக்கும்

தட்டுகளிடையாக இருக்கும் சமாந்தரத் தட்டு வளி ஒடுக்கியொன்றின் மேல் தட்டு ஓர் இரசாயனத் தராசின் ஒரு புயத்திலிருந்து தொங்கவிடப்பட்டிருக்கின்றது. கொள்ளளவியின் முடிவிடங்கள் குறுஞ்சுற்றுக்கப்பட்டிருக்கும் நிலையில், தராசின் மற்றைய தட்டுக்கு நிறைகள் சேர்த்து சமப்படுத்தப்படுகின்றது. தட்டுகளின் பரப்பளவு 100 சென்ரிமீற்றர்$^2$ உம், அவற்றிற்கிடையேயான தூரம் 2 மில்லிமீற்றரும் ஆகும். தட்டுகளுக்கு V வோல்ற்று மின்னழுத்த வேறுபாடு பிரயோகிக்கப்படும் போது சமநிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு [illegible]

www.aswarphysics.weebly.com

Scanned with CamScanner

K - மின்கோடு புகவிடு மாறிலி

மின்மண்டலச் செறிவு = E எனக்.

∴ ஓரலகு ஏற்றம் அனுபவிக்கும் விசை E ஆகும்.



ஓரலகு ஏற்றத்தை d தூரத்தினூடாக நகர்த்தச் செய்யப்படும் வேலை $= E \times d$

அழுத்த வேறுபாடு $= V$

$\therefore E \times d = V$

(கோசின் தேற்றப்படி) $E = \frac{4\pi\sigma}{K}$ σ - பரப்படர்த்தி $= \frac{Q}{A}$

$= \frac{4\pi Q}{KA} = \frac{4\pi Q}{KA} \times d$

கொள்ளளவம் = c எனக.

$$C = \frac{Q}{V} = \frac{Q \times KA}{4\pi Qd} = \frac{KA}{4\pi d}$$

$\therefore$ கொள்ளளவம் $C = \frac{KA}{4\pi d}$

(i) தட்டுகளுக்கிடையேயுள்ள கவர்ச்சி விசை $= \frac{AV^2}{8\pi d^2}$

(ii) திரவத்தினுள் அமிழ்த்தும்போது கவர்ச்சி விசை $= \frac{KAV^2}{8\pi d^2}$

(iii) ~~மின்னேற்றப்பட்டபின் கொள்ளளவி தனிமையாக்கப்பட்டபின் திரவத்தில்~~ அமிழ்த்தப்பட்டிருந்தால் புதிய கவர்ச்சி விசை $= \frac{AV^2}{K \cdot 8\pi d^2}$

$A = 100$ சமீ$^2$

கவர்ச்சி விசை $= \frac{AV^2}{8\pi d^2} = \frac{100V^2}{8\pi(0.2)^2} = 0.4 \times 1000$

$\therefore V = 600$ உவோற். ///

[illegible] மின்னோட்டம் பாயும் சிறிய துண்டொன்றிற்குரிய காந்தப்புலத்திற்கான வப்பிளாசின் விதியைத் தருக. இதிலிருந்து, i எனும் மின்னோட்டம் பாய்வதும், a எனும் ஆரையுடைய n சுற்றுக்களைக் கொண்டதுமான மெல்லிய தம்பிச் சுருளொன்றின் அச்சில், மையத்திலிருந்து x எனும் தூரத்திலிருக்கும் ஒரு புள்ளியிலுள்ள காந்தப்புலத்திற்கான கோவையைப் பெறுக.

10 செந்திமீற்றர் ஆரையுடைய 50 சுற்றுக்களைக் கொண்ட சுருளொன்று அதன் அச்சானது புவிக் காந்தப்புலம் H இற்குச் சமாந்தரமாயிருக்குமாறு வைக்கப்பட்டிருக்கின்றது. சுருளினூடு 3 அம்பியர் மின்னோட்டம் போக்கப்பட்டபோது, அதன் அச்சில், மையத்திலிருந்து 27 செந்திமீற்றர் தூரத்தில் ஒரு பூச்சியப் புள்ளி அவதானிக்கப்பட்டது. H ஐக் கணிக்க.

மின்னோட்டத்தின் திசை நேர்மாறாக்கப்படும்போது இருக்கும் விசைக் கோடுகளையும் பூச்சியப் புள்ளிகள் ஏதுமிருப்பின் அவற்றின் நிலையையும் பொருத்தமான ஒரு வரிப்படத்தில் பருமட்டாக வரைக.

விடை : 6 லாப்பிளாசின் விதி :




AB என்பது 1 என்னும் மின்னோட்டம் பாயும் கடத்தி RS இலுள்ள சிறு மூலகம். P என்பது AB யின் நடுப்புள்ளியில் இருந்து r தூரத்தில் உள்ள புள்ளி. P யில் விளையும் காந்தப் புலச்செறிவு f ஆகும்.

காந்தப்புலச் செறிவு f ஆனது

(i) மின்னோட்டம் i யிற்கு நேர்விகிதசமன்

(ii) சைன் θ ற்கு நேர்விகிதசமன்.

(iii) $r^2$ ற்கு நேர்மாறு விகிதசமன்.

(iv) AB யின் நீளம் Sl ற்கு நேர்விகிதசமமாகும்.

அதாவது $f \propto \frac{i\,Sl\,\text{சைன்}\,\theta}{r^2}$

$$f = \frac{i\,Sl\,\text{சைன்}\,\theta}{r^2} \times K \quad (K \text{ மாறிலி})$$




மூலகம் AB யினால் P என்னும் புள்ளியில் விளையும் செறிவு f

$$f = \frac{ISl\,\text{Sin}\,\theta}{10\,a^2} \quad (\text{இலாப்பிளாசின் விதிப்படி})$$

$$f = \frac{ISl}{10a^2} \quad (\theta = 90^\circ)$$

முழுச்சுருளையும் கருத்திற் கொள்ளும்போது அதனில் பாயும் மின்னோட்டத்தினால் P யில் ஏற்படும் மொத்தச் செறிவு F ஆனது 2f, சைன் α வை சுருளின் அரைச் சுற்றளவுக்கூடாகத் தொகையிடு செய்வதின்மூலம் பெறப்படும்.

$$F = \frac{2Idl}{10a^2}\,\text{Sin}\,\alpha = \frac{2I.\,\text{Sin}\,\alpha}{10d^2} \times \pi rn$$

∴ {dl சுருளின் அரைப்பரிதி நீளம் = $\pi rn$ n = சுற்றுகளின் எண்ணிக்கை.

$$F = \frac{2\pi r\,nI}{10a^2} \cdot \frac{r}{a} \quad \text{———} (1) \qquad \text{ஆனால்}\quad a = (r^2 + x^2)^{1/2} \quad \text{———} (2)$$

$$\therefore\quad F = 2\pi\,nIr^2 / 10(r^2 + x^2)^{3/2}$$

n = 50
r = 10 cm
i = 3 cm
x = 27

$$4 = \frac{2\pi \times 50 \times 3 \times 10^2}{10(10^2 + 27^2)^{3/2}}$$

$$= 0.4 \text{ எசட்டு}$$




X = நடுநிலைப்புள்ளி